

# 25-04-2024 செய்தி

## உரிமையும் எல்லையும்!

**கார்கோ கிர் வழக்கு**

- தேவையில்லாத, சின்னச் சின்ன விவரங்களையெல்லாம் வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுவில் குறிப்பிடத் தேவையில்லை என்கிறது உச்சநீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு.
- 2019 அருணாசல பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற காரிகோ க்ரி என்பவர், மூன்று வாகனங்கள் இருந்தது குறித்து தன் வேட்புமனுவில் தெரிவிக்கவில்லை.
- அதைக் காரணமாக்கி அவரின் வெற்றியை ரத்து செய்ய வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கில், குவாஹாட்டி உயர்நீதிமன்றத்தில் காரிகோ க்ரி செய்த மேல்முறையீட்டில், அவருக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

**மூன்று கருத்துகள்**

1. எல்லா குடிமக்களையும் போல அரசியல் வாதிகளுக்கும் தன் மறைப்பு நிலை (ப்ரைவசி) உரிமை உண்டு என்பது முதலாவது கருத்து.
2. இரண்டாவதாக, வேட்பாளர் குறித்த அனைத்து விவரங்களையும் தெரிந்துகொள்ளும் உரிமை வாக்காளருக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை.
3. மூன்றாவதாக, தெரிவிக்கப்படாத விவரங்கள் எல்லாமே மறைக்கப்பட்ட விவரங்களாக கருதப்படக் கூடாது.

- தனது சொத்தின் மதிப்பு ரூ.8.4 கோடி என்று வேட்பு மனுவில் தெரிவித்திருக்கும்போது, காரிகோ க்ரி தெரிவிக்காமல் விட்ட இரண்டு இரு சக்கர வாகனங்களும், ஒரு வேனும் அற்பமானவை என்று உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

**தீர்ப்பு கருத்து**

- உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி துணிகள் செருப்புகள், வீட்டு உபயோகப் பொருள்கள் போன்றவை எல்லாம் சொத்துக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டியவை அல்ல.
- குறிப்பிடத்தக்க அளவிலான சொத்து மதிப்பு இல்லாதவை வேட்புமனுவில் இடம்பெற வேண்டிய அவசியம் இல்லை என்றுபொருள்.
- அரசியல் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, பாலியல்புகள், மணமுறிவு (டைவர்ஸ்) உள்ளிட்டவை பொது வெளிப்பரப்புரைகளாக மாறிவரும் சூழலில், உச்சநீதிமன்ற தீர்ப்பு ஒரு வகையில் அவர்களுக்கு ஆறுதலாக அமைகிறது.
- வாக்காளர்களுக்குக் தேவையில்லாத, பொதுவாழ்க்கையில் ஒருவர் ஈடுபடுவதற்கு தொடர்பில்லாத தகவல்கள் வேட்புமனு உறுதிமொழியில் இடம்பெறத் தேவையில்லை என்பதை வரவேற்கலாம்.

## குகேஷ்: இந்தியாவில் பெருமிதம்

- உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் விளையாடுவதற்குத் தகுதிபெறுவதற்கான கேண்டிடேட்ஸ் போட்டித் தொடரில் சென்னையைச் சேர்ந்த குகேஷ் வெற்றிபெற்று, ஒட்டுமொத்த தேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

**தகுதியேற்பு**

- பொதுவாக செஸ் விளையாட்டில் உலக சாம்பியன் பட்டத்துக்காக போட்டிக்கு நடப்பு சாம்பியன் நேரடியாகத் தகுதி பெற்றுவிடுவார்.
- அவருடன் போட்டிபோட வேண்டியவர் யார் என்பது கேண்டிடேட்ஸ் போட்டித் தொடரின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- இந்த ஆண்டு கேண்டிடேட்ஸ் போட்டித் தொடர் கனடா தலைநகர் டொரண்டோவில் நடைபெற்றது.
- உலகத் தரவரிசையில் இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ள இத்தாலியின் ஃபாபியோனா கருவபானா, அமெரிக்கரான ஹிகாரு நாகமுரா, முந்தைய இரு கேண்டிடேட்ஸ் தொடர்களில் வென்றவரான ரஷ்யாவின் இயான் நிபோம்னிஷி ஆகியோரில் யாரேனும் ஒருவர்தான் இதில் வெற்றிபெறுவார் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

**இளம் வயதில்**

- ஆனால், இறுதிச்சுற்றில் ஹிகாரு நாகமுராவை எதிர்கொண்ட குகேஷ் 71ஆவது காய் நகர்த்தலின்போது போட்டியைச் சமன்செய்து முடித்து முதலிடம் பெற்றார்.
- இதன்மூலம் சீனாவில் நடைபெறவிருக்கும் இந்த ஆண்டின் உலக சாம்பியன்ஷிப் போட்டியில், நடப்பு சாம்பியனான சீனாவைச் சேர்ந்த டிங்லிரனுடன் குகேஷ் மோதுவார்.
- 17 வயதாகும் குகேஷ், செஸ் வரலாற்றில் மிக இளம் வயதில் உலக சாம்பியன் பட்டத்துக்கான போட்டியில் விளையாடத் தகுதிபெற்றவர் என்னும் சாதனையையும் நிகழ்த்தியுள்ளார்.
- இதற்கு முன் 1984இல் ரஷ்யாவைச் சேர்ந்த கேரி கேஸ்பரோவ் 22 வயதில் உலக சாம்பியன் போட்டியில் விளையாடியதே உலக சாதனையாக இருந்தது.
- விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு உலக சாம்பியன் போட்டிக்குத் தகுதிபெறும் இரண்டாவது இந்தியரான குகேஷ் 12 வயதில் கிராண்ட்மாஸ்டர் ஆனவர்.
- குகேஷின் வெற்றி, செஸ்ஸில் அதிவேகமாக முன்னேறிவரும் இந்தியாவின் பயணத்தில் மேலும் ஒரு மைல்கல்.

## சூரிய மின் உற்பத்தி 4.05 கோடி யூனிட்டாக உயர்வு

- தமிழகத்தில் தற்போது நிலப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி மின்நிலையங்களின் நிறுவுதிறன் 6,912 மெகாவாட்டாக உள்ளது.
- இதுதவிர, கட்டிடங்கள் மேல் அமைக்கப்பட்ட மேற்கூரை சூரிய சக்தி மின் நிலையங்களின் நிறுவுதிறன் 449 மெகாவாட், விவசாய நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி மின்நிலையங்களின் நிறுவுதிறன் 65 மெகாவாட் என மொத்தம் 7,426 மெகாவாட் திறனில் சூரியசக்தி மின்நிலையங்கள் உள்ளன.

**காற்றாலைகளில் 1 கோடி யூனிட்**

- தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் 10,603 மெகாவாட் திறனில் காற்றாலை மின் நிலையங்களை அமைத்துள்ளன.
- ஆண்டுதோறும் மே முதல் செப்டம்பர் வரை காற்றாலை சீசன் ஆகும்.
- அப்போது, காற்றாலைகளில் இருந்து தினமும் சராசரியாக 10 கோடி யூனிட்களுக்கு மேல் மின்சாரம் கிடைக்கும்.

SURESH'